கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம், பொ.ப.து., வடிவமைப்பு வட்டம், நீ.ஆ.து., சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணை

முன்னிலை : பொறிஞர். R. வில்வநாதன், எம்.இ.,
கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து.,

செயல்முறை ஆணை எண் இ3/ 0329 / 2019 நாள். 22.10.2019

பொருள் : பணியமைப்பு - பொபது - த.நா.அ.ப.தொகுதி - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 2015 - 2016, 2016 - 2017 மற்றும் 2017 - 2018 ஆம் ஆண்டுக்களுக்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வு தொகுதி IV-ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு கண்காணிப்புப் பொறியாளர், பொபது., வடிவமைப்பு வட்டம், நீ.ஆ.து., சென்னை-5 அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த திருமதி.கா.ஜெயலட்சுமி அவர்களுக்கு பணிவரன்முறை செய்ய ஆணை வழங்குவது - தொடர்பாக.

பார்வை :
1. செயலாளர், த.நா.அ.ப. தேர்வாணையம், சென்னை. கடித எண் 1150/ பிஎஸ்டி-மு2 / 2019 நாள். 18.02.2019
2. முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொபது., சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணை எண் எஸ் 3(3) / 25366 / 2019 நாள் 25.02.2019
3. தலைமைப் பொறியாளர் பொபது., வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம், நீ.ஆ.து., சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணை எண் இ1(1) . 0677 . 2019/2 நாள் 07.03.2019
4. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். இ3//329 /2019 நாள்.07.03.2019

....

கண்காணிப்புப் பொறியாளர் அய்யா,

பார்வை (1) -ல் காணும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் சென்னை-5 அவர்களின் கடிதம் மூலம் இளநிலை உதவியாளராக தெரிவு செய்யப்பட்டு பொதுப்பணித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை-(2)-ல் காணும் முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொபது., சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணையின் வாயிலாக திருமதி.கா.ஜெயலட்சுமி (பிறந்த தேதி 26.08.1986) அவர்கள் கண்காணிப்புப் பொறியாளர், பொபது., வடிவமைப்பு வட்டம், நீ.ஆ.து., சென்னை-5 அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்து ஒதுக்கீடு ஆணை வழங்கப்பட்டது.

மேற்காணும் இளநிலை உதவியாளரது பணி பார்வை 2-ல் காணும் முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொபது.,

சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணையின்படி, தனியர் பணியில் சேர்ந்த நாளான 13.03.2019 மு.ப முதற்கொண்டு தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணிவிதிகள் பொது விதி, 23-a(i)-ன்படி, மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றம், சென்னை மற்றும் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வுகள் தொகுதி IV தொடர்பாக தொடுக்கப்பட்ட வழக்குகளில் வழங்கப்படவுள்ள தீர்ப்புக்குட்பட்டது என்ற நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

தனியர், தனது தகுதிகாண் பருவத்தினை பணிவரன்முறை படுத்தப்பட்ட நாளான 13.03.2019 முதல் துவக்கியதாக கருதப்படுகிறார். அந்நாளிலிருந்து தொடர்ச்சியான மூன்றாண்டு தொடர் பணிகாலத்தில் இரண்டாண்டு பணியினை நிறைவு செய்ய வேண்டும் எனவும் ஆணை வழங்கப்படுகிறது.

ஒம்/- பொறிஞர். R. வில்வநாதன், எம்.இ.,
கண்காணிப்புப்பொறியாளர் (கூ/பொ), பொபது.,
வடிவமைப்பு வட்டம், நீ.ஆ.து., சென்னை-5.

பெறுநர்

திருமதி.கா.ஜெயலட்சுமி, இளநிலை உதவியாளர்,
கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம், பொபது.,
வடிவமைப்பு வட்டம், நீ.ஆ.து.,
சேப்பாக்கம், சென்னை-5.

நகல்

இ3 இருக்கைக்கு (பணிப்பதிவேட்டில் பதிவு மேற்கொள்ள)
இருப்பு கோப்புக்கு

// ஆணைப்படி அனுப்படுகிறது //

30/10/19

கண்காணிப்பாளர்

30.10.19